மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மேட்டூர்
முன்னிலை:திரு.ஆர்.மணிவர்மன், பி.ஏ., பி.எல்., எல்.எல்.எம்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, மேட்டூர்
2022 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 29 ஆம் நாள் வெள்ளிக்கிழமை
இ.ம.எண்.06/2022
அ.வ.எண்.395/2012

1.வையாபுரி
2.பெரமகவுண்டர்
3.மயிலி (எ) மயில் ... மனுதாரர்கள்/1 முதல் 3 பிரதிவாதிகள்

/எதிராக/

பழனியப்பன் ... எதிர்மனுதாரர்/வாதி

இம்மனு கடந்த 27.07.2022 ஆம் தேதியன்று இந்நீதிமன்றம் முன்பாக இறுதியான விசாரணைக்கு வரப்பட்டு மனுதாரர்கள்/1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திரு.என்.சசிகுமார் அவர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.பி.பாலமுருகன் அவர்கள் ஆஜராகியும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும், வழக்கு ஆவணங்களை பரிசீலனை செய்தும் இதுநாள் வரை எமது ஆய்வில் இருந்து வந்து மேற்படி இம்மனுவில் இந்நீதிமன்றம் வழங்கிடும்.

உத்தரவு

உரிமையியல் நடைமுறைச்சட்டம் பிரிவு 151ன் கீழ் 05.03.2022 அன்று முடிக்கப்பட்ட மனுதாரர்கள்/1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு சாட்சியத்தை கூடுதல் சாட்சிய விசாரணைக்காக மீண்டும் திறக்க உத்தரவிடக்கோரி மனுதாரர்கள்/1 முதல் 3 பிரதிவாதிகள் மனுதாக்கல் செய்துள்ளார்கள்.

1) மனுப்பிரமாணப் பத்திரிக்கையின் சுருக்கம் : –

இவ்வழக்கானது கடந்த 05.03.2022 அன்று 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு கூடுதல் சாட்சிய விசாரணைக்காக வாய்தா போடப்பட்டிருந்தது. 1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் முனியப்பன் மகன் செல்வராஜ் என்பவரை சாட்சி விசாரணைக்கு அழைத்த போது செல்வராஜ் ஆஜராகாததால் கூடுதல் சாட்சியம் நீதிமன்றத்தால் முடித்து வைக்கப்பட்டது. மேற்படி வழக்கு தொடர்பான விசயங்களை நிரூபிக்க செல்வராஜை கூடுதல் சாட்சியாக விசாரணை செய்யப்பட வேண்டியுள்ளதால் முடிக்கப்பட்ட

மனுதாரர்கள்/1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு சாட்சியத்தை மீண்டும் திறக்க உத்தரவிடக்கோரி மனுதாரர்கள்/1 முதல் 3 பிரதிவாதிகள் மனுதாக்கல் செய்துள்ளார்கள்.

2) எதிர்மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்ட எதிருரையின் சுருக்கம்:

இம்மனு பொய்யானது. சட்டப்படியும், நியாயப்படியும் நிலைக்கத்தக்கதல்ல. ஏற்கனவே முனியப்பன் என்பவர் முதல் விசாரணை செய்யப்பட்டு, அவர் குறுக்கு விசாரணைக்கு வராததால் அவரது சாட்சியம் முடிக்கப்பட்டு, வேறு சாட்சிகளை விசாரிக்கும் பொருட்டு 05.03.2022 தேதியில் வாய்தா போடப்பட்டது. ஆனால் அன்றும் மனுதாரர்கள் தரப்பில் வேறு சாட்சிகளை முன்னிடாததால் பலமுறை மனுதாரர்களின் வேண்டுகோளின்படி ஒத்தி வைக்கப்பட்ட வழக்கு அன்று முடிக்கப்பட்டது என்பதே உண்மை. முனியப்பன் மகன் செல்வராஜ் ஏன் விசாரணைக்கு வரவில்லை என மனுதாரர்கள் பிரமாணப்பத்திரிக்கையில் கூறவில்லை. மனுதாரர்கள் வழக்கின் விசாரணையை காலதாமதப்படுத்த இம்மனுவை தாக்கல் செய்துள்ளதால் மனுவினை செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர்/வாதி கூறியுள்ளார்.

3) இருதரப்பு கற்றறிந்த வழக்குரைஞர்களின் மதிப்பிற்குரிய வாதங்கள் கேட்கப்பட்டன. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. மனுதாரர்கள் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் வாய்மொழிச் சாட்சியங்களோ, சான்றாவணங்களோ முன்னிலைப்படுத்தவில்லை.

4) பிரச்சினை :–

இம்மனு அனுமதிக்கத்தக்கதா? என்பதே ஆகும்.

5) பிரச்சினைக்கான தீர்வு

(i) மனுதாரர்கள் தரப்பில் முடிக்கப்பட்ட மனுதாரர்கள்/1 முதல் 3 பிரதிவாதிகள் தரப்பு சாட்சியத்தை மீண்டும் திறக்க உத்தரவிடக்கோரி மனுதாரர்கள்/1 முதல் 3 பிரதிவாதிகள் இம்மனுவினை தாக்கல் செய்துள்ளது தெரிய வருகிறது.

(ii) எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கின் விசாரணையை காலதாமதப்படுத்த இம்மனுவை தாக்கல் செய்துள்ளதால் மனுவினை செலவுத்தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டுமென எதிர்மனுதாரர் கட்சி செய்துள்ளது தெரியவருகிறது.

(iii) வழக்கு ஆவணங்களை கவனமாக பரிசீலனை செய்ததில் இவ்வழக்கில் பிரதிவாதிகள் தரப்பில் கூடுதல் சாட்சியாக ஒரு செல்வராஜ் த/பெ. முனியப்பன் என்பவர் பி.வா.சா.2 ஆக 23.11.2021 அன்று இந்நீதிமன்றத்தில் முதல் விசாரணை செய்யப்பட்டுள்ளார். பின்பு 29.11.2021 மற்றும் 09.12.2021, 07.02.2022, 10.02.2022, 16.02.2022 ஆகிய தேதிகளில் நீதிமன்றத்தில் ஆஜராகவில்லை. இந்நிலையில் மேற்படி சாட்சியின் வருகைக்காக கடந்த 23.02.2022ம் தேதியில் வாய்தா வைக்கப்பட்டிருந்த போதும் பி.வா.சா.2 ஆஜராகாததால் அவரின் சாட்சியம் முடிக்கப்பட்டுள்ளது என்பது தெரியவருகிறது. மேலும் பி.வா.சா.2 மேற்சொன்ன தேதிகளில் வழக்கு விசாரணைக்கு நீதிமன்றத்தில் ஆஜராகாததற்கான எவ்வித காரணங்களையும் இம்மனுவில் மனுதாரர்கள் குறிப்பிடவில்லை என தெரியவருகிறது.

(iv) விசாரணை நீதிமன்றத்தில் தான் சாட்சிகளை குறுக்கு விசாரணை செய்ய எதிர்தரப்பினருக்கு வாய்ப்பு வழங்க முடியும் என்பதாலும், மனுதாரர்கள் தங்களுடைய வழக்கை நிரூபிக்க ஒரு வாய்ப்பு வழங்குவது நீதிக்கு உகந்தது என்பதால் இம்மனு அனுமதிக்கத்தக்கது என இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது. இருந்தபோதும் 05.03.2022ல் 1முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் கூடுதல் சாட்சியத்திற்காக வாய்தா போடப்பட்டு, சாட்சி ஆஜராகாததால் 1முதல் 3 பிரதிவாதிகள் தரப்பில் சாட்சியம் முடிக்கப்பட்டு, அதனை திறக்க இம்மனுவை தாக்கல் செய்துள்ளதால் மனுதாரர்கள், எதிர்மனுதாரருக்கு ஏற்பட்ட காலவிரையத்தை ஈடுசெய்யும் வகையில் மனுதாரர்கள் எதிர்மனுதாரருக்கு ரூ.1000/−செலவுத்தொகையாக செலுத்தும் பட்சத்தில் இம்மனுவினை அனுமதிக்கலாம் எனவும், அவ்வாறு செலுத்த தவறும்பட்சத்தில் இம்மனு தள்ளுபடியாகிவிடும் எனவும் இந்நீதிமன்றம் தீர்மானிக்கிறது.

முடிவாக மனுதாரர்கள் எதிர்மனுதாரருக்கு ரூ.1000/–யை செலவுத்தொகையாக 05.08.2022 க்குள் செலுத்தும் பட்சத்தில் இம்மனு அனுமதிக்கப்படும் என உத்தரவிடப்படுகிறது. அழைக்க.06.08.2022.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தருக்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2022 ஆம் ஆண்டு ஜுலை மாதம் 29 ஆம் நாள் இந்த திறந்த நீதிமன்றத்தில் என்னால் அவையறியப் பகரப்பட்டது.

ஒப்பம்/–திரு.ஆர்.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.

<u>மனுதாரர்கள் தரப்பு சாட்சிகள் சான்றாவணங்கள்:– இல்லை</u>

<u>எதிர்மனுதாரர் தரப்பு சாட்சிகள் சான்றாவணங்கள்:– இல்லை</u>

ஒப்பம்/–திரு.ஆர்.மணிவர்மன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
மேட்டூர்.